**அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கம் - 2018**

---

## 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் கட்டளைச்சட்டத்தினதும் (அதிகாரம் 283) 1983 இன் 18 ஆம் இலக்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்க அதிகாரச்சட்டத்தின் 18(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சங்கத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சங்கத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- சங்கத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சங்கத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கத்தவர் இறந்தால் அல்லது ஏனைய காரணங்களின் அடிப்படையில் அறவீடுகள் நிலுவையாக உள்ள கடன்பட்டோராக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 1,060,279 மீதி மற்றும் 348 அங்கத்தவர் கடன் கணக்குகளில் காணப்படுகின்றதும் தொடர்ந்தும் அவ்வாறே நிலுவையாக உள்ளதுமான ரூபா 14,040,217 | 348 அங்கத்தவர்களுக்கு இடையே 41 பேர் வெளிநாட்டுத் தூதரகங்களில் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளமையால் வருடாந்தம் அல்லது அரையாண்டு ரீதியில் | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தமை. |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான கடன் மீதியையும் உள்ளடக்கி கூட்டுமொத்தமாக ரூபா 15,100,496 கடன் மீதி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் தீர்த்து வைக்கப்படவில்லை. அந்தக் கடன் மீதியில் ரூபா 892,064 தொகை ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் தீர்க்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், மரண பணிக்கொடை செலுத்தப்பட்டுள்ள 18 அங்கத்தவர்களிடமிருந்து மாத்திரம் மேலும் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 1,888,461 ஆக இருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | பணம் அறவிடப்படுவதாகவும், கடிதங்கள் மற்றும் தொலைபேசி மூலம் அங்கத்தவர்களுக்குரிய திணைக்களம் அறிவித்து ஏனைய நிலுவை மீதியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சங்கத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது தரைமாடியில் ஒரு பகுதியை வெளி நிறுவனம் ஒன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனம் சங்கத்தின் கட்டிடத்தில் இருந்து விலகிச் சென்று 5 வருடங்களும் 03 மாதங்களும் கடந்திருந்த போதிலும் வாடகையான ரூபா 127,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட எழுத்துமூல அறிவித்தல் வழங்கியதற்கான பதில் கிடைக்காமையின் அடிப்படையில் 2016 நவம்பர் 12 ஆந் திகதி உரிய நிறுவனம் பிணக்குகள் தீர்க்கும் சபைக்கு அழைக்கப்பட்டிருந்தமை மற்றும் அதன் போது நிறுவனத்தின் தலைவரால் நிலுவைப் பணத்தை செலுத்துவதற்கு இணங்கி இருந்த போதிலும் இதுவரையிலும் செலுத்தப்பட்டிருக்காமை | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை. |

### 1.5.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கத்துவத்தில் இருந்து விலகிச் சென்றுள்ள அங்கத்தவர்களின் பங்களிப்புப் பணக் கணக்கில் தீர்த்து வைக்கப்படாத ரூபா 15,629,037 தொகையான செலவு மீதி முறையான பிரகாரம் இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>முன்னைய ஆண்டில் இந்த மீதி ரூபா 12,062,928 ஆனமையால் தீர்த்து வைக்கப்படாத மீதி வருடாந்தம் அதிகரித்துச் செல்கின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | அங்கத்தவர்கள் தமது பணத்தை பெற்றுக்கொள்வதற்கு முன்வராமை மற்றும் ஆவணங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக இந்த மீதி சேமிக்கப்பட்டிருந்தமை மற்றும் உரித்தாளர்கள் சமூகமளித்ததன் பின்னர் குறித்த திட்டமுறைமையில் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | செலுத்த வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தமை |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானம் போன்றவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1891 இன் 05 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சேமலாப சங்க சட்டத்தின் 16(1), (2) மற்றும் (3) ஆம் பிரிவுகள் | சங்கத்தின் 133 மற்றும் 134 பொதுச் சட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்ட விதிகளை திருத்தி வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை. | வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது. |
| (ஆ) அரசாங்க சேவை பரஸ்பர சேமலாப சங்கத்தின் திருத்தப்பட்ட சட்டத்தின் I ஆம் அத்தியாயத்தின் 10(1) ஆம் பிரிவு | அங்கத்தவரின் மரணமொன்றை அறிவித்து இரண்டு மாதங்களுக்குள் அவருக்கு உரித்தான அளிப்புக்களை செலுத்த வேண்டிய போதிலும் அங்கத்தவருக்காக அவ்வாறு செலுத்த வேண்டிய ரூபா 4,925,000 தொகையான மரண அளிப்புப் பணம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | தேவையான ஆவணங்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் உரிய பிரகாரம் சமர்ப்பிக்கப் படாமையால் பணம் செலுத்துவதற்கு உரியதாக அனுப்பப்படுகின்ற பற்றுச்சீட்டுக்கள் மீளக்கிடைக்கப் பெறாமை போன்ற காரணங்களால் கொடுப்பனவுகள் தாமத மடைந்தமைக்கு தாக்கம் அளித்திருந்தது. | |
| (இ) அரசாங்க சேவை பரஸ்பர சேமலாப சங்கத்தின் திருத்தப்பட்ட சட்டத்தின் I ஆம் அத்தியாயத்தின் 7(ஆ)(i) ஆம் பிரிவு | 06 கடன் தவணையை விட நிலுவையாக இருந்த 20 அங்கத்தவர்களுக்காக சட்டரீதியான அடிப்படையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் அந்த அங்கத்தவர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியின் கூட்டுமொத்தம் ரூபா 330,032 ஆகக் காணப்பட்டது. | 20 அங்கத்தவர்களுக்கு இடையே ஒரு அங்கத்தவருக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் எஞ்சிய அங்கத்தவர்களுக்காக அங்கத்தவர் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு எதிர்கால நடவடிக்கைகளை செய்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. | |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 | குறித்த பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2019 மே 06 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2002 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு | நிறுவனத்தால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது. |
| (ஊ) | 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நிறுவனத்தால் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | | |
| (எ) | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 3.6, 3.9, 11.2 மற்றும் 11.6 ஆம் பிரிவுகள் | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் தமது வளங்களை வினைத்திறனாக செயற்படுத்த வேண்டிய போதிலும் இதுவரை சங்கத்தால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 56,626,660 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 51,606,969 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,019,691 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு கடன் வழங்கியதன் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற வட்டி வருமானம் ரூபா 7,557,726 இனால் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சங்கத்தினால் நடாத்தப்படுகின்ற மாதாந்த நிர்வாகக் குழுக் கூட்டம் மற்றும் விசேட நிர்வாகக் குழுக் கூட்டம் என்பவற்றிற்காக பொதுத் திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டு அங்கத்தவர்கள் பெயரிடப்பட்டிருந்த போதிலும், உரிய கூட்டத்திற்காக அவர்களின் பங்குபற்றல் நலிவான நிலையில் காணப்பட்டது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 20 கூட்டத் தடவைகளில் ஒரு பிரதிநிதி 07 கூட்டத் தடவைகளுக்கு சமூகமளித்திருக்கவில்லை. மற்றைய பிரதிநிதி நியமிக்கப்பட்ட திகதி முதல் 13 கூட்டத் தடவைகளுக்கு பங்குபற்றி இருக்க வேண்டிய போதிலும் 5 கூட்டங்களுக்கு மாத்திரமே சமூகமளித்திருந்தார் | அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் உத்தியோகத்தர்களின் அதிக அலுவலக வேலைகளின் காரணமாக சமூகமளிக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | குழுக் கூட்டத்திற்காக சமூகமளிக்க வேண்டியுள்ளது. |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அங்கத்தவரின் அடிப்படை சம்பளத்தில் அங்கத்தவர் இணங்கிய சதவீதமொன்று அங்கத்தவர் பங்களிப்புப் பணமாக சங்கத்தால் மாதாந்தம் அறவிடப்படுகின்றது. எனினும், அங்கத்தவரின் அடிப்படைச் சம்பளம் வருடாந்தம் அதிகரித்திருந்த போதிலும் அதிகரித்த அடிப்படை சம்பளத்திற்கு ஒத்ததாக அங்கத்தவர்களிடம் இருந்து அங்கத்துவ பங்களிப்புப் பணம் அறவிடப்படாதிருந்த 35 சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் நிறுவனத் தலைவரினால் தற்போதைய சம்பளம் அறிவிக்கப்படாத சந்தர்ப்பம் காணப்பட்டதுடன் சம்பளம் கடனை விண்ணப்பிக்கும் போது சம்பளப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அங்கத்தவர் பங்களிப்புப் பணக் கணக்கை அறவிடுவததை முறைமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டிய உள்ளது. |
| (ஆ) சங்கத்தால் வழங்கப்பட்டுள்ள ஆதனக் கடன் தொடர்பாக கணனி முறைமையில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 995,098 கூட்டுத்தொகையான ஆதனக் கடன் மீதி ஒன்று காணப்படுகின்ற 4 அங்கத்தவர்களினால் அந்தக் கடன் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒரு உத்தியோகத்தருக்கு கடன் தீர்க்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய மூன்று பேர்களின் கடனை அறவிடுவதற்குத் தேவையான சட்டரீதியான ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றது. | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கான முறையான நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது. |
| (இ) அங்கத்தவர் மரணமடைதல் அல்லது ஏனைய காரணங்களின் அடிப்படையில் 2014 திசெம்பர் 31 வரை அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதி நிதி நிலைமைக் கூற்றில் கடன்பட்டோராக அறிக்கை இடப்பட்டிருந்தது. எனினும், இதுவரையிலும் காணப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை 2015 ஆம் ஆண்டு முதல் மாற்றப்பட்டு அவ்வாறான நிலுவை கடன் மீதி அங்கத்தவர் கடன் மீதி கணக்குகளிலும் அறிக்கை இடுவதற்கு சங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதியை வெளிப்படுத்துதல் சரியாக இடம்பெறவில்லை. | கொள்கை ரீதியான வேறுபாடுகள் நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் தொடர்பான கொள்கையின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியாக வெளிப்படுத்தும் வகையில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட வேண்டி இருத்தமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கடந்த 5 ஆண்டுகளில் சங்கத்தின் வருடாந்த சபைக் கூட்டங்களுக்கு அங்கத்தவர்களின் சமூகமளித்தல் மொத்த அங்கத்துவத்தில் அண்ணளவாக 11 சதவீதத்திற்கும் 13 சதவீதத்திற்கும் இடையே இருந்தது. இதன் காரணமாக சங்கத்தின் நிர்வாக சபைக்கு பொருத்தமான அங்கத்தவர்களை தெரிவு செய்தல் சங்கத்தின் அபிலாஷைகளுக்கு தீர்மானங்களை எடுத்தல் குறைந்த பிரதிநிதிகளுடன் இடம்பெற்றிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சகல அங்கத்தவர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் சங்கத்தின் அறிக்கையுடன் கூட்டம் நடைபெறுகின்ற திகதியை அறிவித்து அனுப்புவதற்கும் செய்திப் பத்திரிகை அறிவித்தல் ஒன்றின் மூலமும் அறிவிக்கப்படுகின்றது. | வருடாந்த சபைக் கூட்டங்களுக்காக அங்கத்தவர்களின் பங்குபற்றலை அதிகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது. |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு தேறிய விளைவுகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க முடியாதிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இனங்காணப்படாத அனுப்புதல்கள் கணக்கில் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு மீதி சீராக்கப்பட்டு தேறிய மீதியாக ரூபா 1,959,112 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | உரித்தாளர்கள் முன்வந்ததும் உடனடியாக அந்தத் தொகையைத் தீர்த்து வைப்பதற்கு சங்கம் கட்டுப்பாடு உடையதால் சொத்துக்களாக வெளியிடப்படாதிருந்தமை மற்றும் இந்தக் கணக்கு சங்கத்திற்கு பொறுப்பொன்றாக இருந்தமை | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தமை. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சங்கத்திற்கு கிடைத்திருந்த நானாவித வருமானம் மற்றும் ஏனைய பெறுவனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,959,112 தொகை முறையான பிரகாரம் இனங்கண்டு கணக்கு வைப்பதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த மீதி வருடாந்தம் அதிகரித்துச் சென்றிருந்ததுடன் முன்னைய ஆண்டில் அந்த மீதி ரூபா 1,660,266 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | வங்கிக் கணக்கு ஊடாக நேரடியாக சங்கத்திற்குக் கிடைத்துள்ள உரிமையாளர் அல்லது திணைக்களம் என இனங்காண முடியாத இந்தத் தொகை உரிய உரித்தாளரை காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நானாவித வருமானம் மற்றும் பெறுவனவுகளை முறையான பிரகாரம் இனங்கண்டு கணக்கு வைக்க வேண்டி இருந்தமை. |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 2,175,000 கூட்டுத்தொகையான 6 விடயங்கள் மீளாய்வாண்டில் பெறுகை செய்யப்படாதிருந்ததுடன் பெறுகைத் திட்டத்தில் இல்லாத ரூபா 1,745,743 கூட்டுப்பெறுமதியான 4 விடயங்கள் மீளாய்வாண்டின் போது பெறுகை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சங்கத்தால் மீளாய்வாண்டின் பெறுகை நடவடிக்கைகள் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தின் தேவையினை பூர்த்தி செய்து கொள்வதற்கு முகாமைத்துவக் குழு தீர்மானித்தமையால் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் பெறுகை செய்யப்படாதிருந்தமை மற்றும் திட்டத்தில் உள்ளடக்கப்படாத விடயங்கள் பெறுகை செய்வதற்கு ஏற்பட்டிருந்தமை. | முறையான பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரித்து அதன் பிரகாரம் பெறுகை செய்ய வேண்டியிருந்தமை மற்றும் பெறுகைத் திட்டம் காலத்தின் தேவையின் அடிப்படையில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |
| (ஆ) | அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்க கட்டிடத்தின் தரைமாடியை திருத்துவதற்காக ரூபா 1,475,065 தொகையான உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டு இருந்தது. தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களாக பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு மற்றும் பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் என்பவற்றைப் பெற்றிருந்தமை கோவையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்படவில்லை. உடன்படிக்கை செய்யப்பட்ட பணிகள் மற்றும் மேலதிக வேலைகளுக்காக உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையை விட அதிகமாக ரூபா 226,928 கூட்டுமொத்தமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக பெறுகைக் குழுவில் இருந்து பெறப்பட்ட அங்கீகாரம் கோவை பரிசோதனையின் போது அவதானிக்கப்படவில்லை. | BOQ இல் உள்ளடக்கப்படாத வர்ணங்களைப் பூசுவதற்காக ரூபா 226,928 தொகை செலுத்தப்பட்டிருந்தமை மற்றும் குறுகிய கால ஒப்பந்தம் ஆக இருந்தமையால் தாமதக்கட்டணம் அறவிடப்படாமைக்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 முகாமைத்துவ தகவல் முறைமையின் விளைவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பேரேட்டுக் கணக்குகளின் மீதியில் மீளாய்வாண்டிற்குரிய சீராக்கங்கள் நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் மேற்கொள்வதற்கு கனனி முறைமையில் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. கனனி முறைமையில் பெறப்பட்ட மீதிகள் முறைமைக்குப் புறம்பாக நாட்குறிப்புப் பதிவுகள் மூலம் சீராக்கப்பட்டு அந்த மீதியை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கனனி முறைமையின் ஊடாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் வசதிகள், கனனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதனால் கனனி முறைமைக்குப் புறம்பாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது குறைபாடுகள் காணப்படும் ஆபத்து ஒன்று காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. | கணணி முறைமையில் இந்தப் பிரச்சினை காணப்படுகின்றமையால் 2019 ஆம் ஆண்டின் போது குறைபாடுகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கக்கூடிய வகையில் கனனி முறைமையை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. |